Path to Dharma

தர்ம நெறி - (Dharma Neri)

71

Sri Sankar Publications
Kshethra Vinayaka Temple, Sri Munneswaram,Chilaw, Sri Lanka.
க்ஷேத்திர (வயல்) விநாயக ஆலயம், ஸ்ரீ முன்னேஸ்வரம், சிலாபம், ஸ்ரீ லங்கா.

Author - B.S.Sarma

November 2013 நவம்பர் (ஐப்பசி /கார்திகை)

காலங்கள் தோறும் இந்து சமயம் - Hinduism through ages

உபநிடதங்கள்

உபநிடதம் என்ற சொல்லின் விளக்கம், உப + நி + ஷத் குருவுக்கு சமீபமாக அமருதல் என்பதே. சிஷ்யர்கள் குருவுக்கு சமீபமாக உட்பார்ந்து வதங்களின் எண்ணக்கருக்களை உபதேச வாயிலாக தர்க்கரீதியாகக் கற்றறிதல் என்பதாகும். ஆரண்யங்களின் அடர்ந்த மரநிரழில் ஆச்சிரமங்களில் அமைந்த (நிலவிய அமைதியான சூழலில் உபநிடத கர்த்தாக்கள் (ரிஷிகள் ஆன்ம தரிசிகள்) மிக ஆழ்ந்த சிந்தனையினூடாக சீடர்களுடன் கருத்தப் பரிமாறி, ஈற்றில் தம் சிந்தனை முடிவுகளை தகுதிவாய்ந்த சீடர்களுக்கே வழங்கினார்கள். சங்கரர், உபநிஷத் என்பதற்கு பிரமத்தைப் பற்றிய ஞான அறிவின் மூலமாக அறியாமையை அகற்றுதல் எனக் கூறுகின்ற பிரமத்தைப் பற்றி அறிவையும் ஞானத்தையும் தர வல்லவை உபநிடதங்கள். எனவே, வேத சிந்தனையின் முடிவே வேதாந்தமாகும்.

ஆன்மதரிசிகளாகிய "ரிஷி" களால் அவர்களுடைய மாணாக்கர்களுக்கு அருளப்பட்ட உபதேசங்களே பரப்பிரமத்தைப் பற்றிய பூரணமான எண்ணக்கருத்துகளே உபநிடதங்கள் எனலாம். அதுவே வேதாந்தத்தின் தொடக்கமும் முடிவுமாகும் அறிவின் அந்தமாகிய உபநிடதங்கள் அறிவியற்தொழிற்பாடுகளை உள்ளடக்கியுள்ளன. குருசிஷ்யர்களின் தத்துவரீதியான சம்பாஷனைகள் மூலமாக திரண்டு எழுந்த வெண்ணைப்போன்றதே வேதாந்தமாகிய உபநிடதங்கள் அவை அறிவாற்றலின் அந்தத்தைத் தொட்டு நிற்கும் ஞானநிலையாகும்.



உபநிடதங்களில் கூறப்பட்டவற்றுள் பெரும்பாலானவை சீடர்களினால் அலசி ஆராயப்பட்ட விஷயங்களே. லௌகீக விஷயங்களிலிருந்து பேராற்றலுள்ள மேலாதிக்கமுள்ள பிரம்மத்தைப்பற்றியும் அது சம்பந்தமான ஆன்மீக விடயங்கள் சிலவேளைகளில் மறுதலித்துக் கூறப்பட்டுள்ளன. ஆயினும் தன்மேலான நிலையிலிருந்து தாழ்ந்து லௌகீகமான நிலையில் மனிதத் தன்மை நிலைகளிலும் சான்னித்தியம் பெற்று லௌகீகமாயையுள் அகப்பட்டுள்ளது போல் நாமம், உருவம், பெற்று லௌகீகமாயையுள் அகப்பட்டுள்ளது போல நாமங்கள், உருவங்கள் குணங்கள், தொழிற்பாடுகள் போன்ற அம்சங்களைக் கொண்டுள்ளது போல தோன்றும்.

நிலைப்பாட்டை உபநிடதங்கள் மறுக்கவில்லை. தத்தவார்த்த கருத்து வெளிப்பாட்டின்படி, அத்தகைய தாழ்வு பிரம்மத்துக்கு இருப்பதை நிலை நிறுத்துவதாக அமைந்துள்ளன. வேதங்களின் ஞானப்பகுதியான உபநிடதங்கள் மனிதனின் ஆன்மாவை மேலான பிரமானத்துடன் ஒப்பிட்டு பரமாத்மாவுக்கு நிகரான நிலையை உபநிடதங்கள் காட்டுகின்றன. வேத உபதேசங்களை உள்ளடக்கிய பிராமணங்களின் அந்தமாக உபநிடதங்கள் விளங்குகின்றன. வேத சித்தனைகளின் முடிவாக உபநிடதங்கள் மிளிர்கின்றன.

உபநிடதங்கள் இந்து சமயத்தின் அடித்தளமாக உள்ளன. ஒவ்வொரு வேதத்துக்கும் சாகைகளும் கிளை இலக்கியங்களும் இருப்பது போல வேதங்கள் ஒவ்வொன்றுக்கும் உபநிடதங்களும் இருக்கின்றன. 21,109,1000,50 பிரிவுகள் நான்குவேதங்களுக்கும் உள்ளன. பல்வேறு தத்தவஞானிகள் உபநிடதங்களின் கருத்துக்களையும் அவற்றுக்கான விளக்கங்களையும் தந்து, அதன் உயர் நிலையை நிறுவியுள்ளார்கள். உபநிடதத்தில் கூறப்பட்டுள்ள அடிப்படைத் தத்துவங்களை நாங்கள் சொந்தக் கருத்துக்களின் அடியொற்றி விளக்கியுள்ளார்கள்.

இறுதியான சத்தியப்பொருளின் உயரிய அறிவின் உச்சநிலையில் உபநிடதங்கள் கொண்டுள்ளது. கொண்டுள்ளது. இது என்றும் அழியாத சத்தியமாகவும் மேலாண்மையுள்ள அதிகார பூர்வமானதாகவும் வலுவிழந்து போகாத உறுதியான வெளிப்படாகவும் அமைந்த தத்துவ தரிசனங்களாக விளங்குகின்றன. பக்தியூட்டக் கூடியதும், பெருந்தன்மை மிக்கதும் பரிசுத்தமானதுமாகிய சிந்தனைச் செல்வத்தை தமது சீடர்களுக்கு வழங்கிய தத்துவ ஞானிகள் தமது சீடர்களுடன் கலந்துரையாடிய சம்பாஷணைகளே உபநிடதங்களாகும். பிராமணங்களின் பிற்பகுதிகளே உபநிடதமாக மிளிர்ந்தன. இவைகளில் நூற்றியிருபதே எமக்குத் தெரிந்ததாக இருக்கின்றன.

மரபு ரீதியின்படி இருநூறு உபநிடதங்கள் உண்டு. இவற்றுள் 112 உபநிடதங்களே பிரசுரிக்கப்பட்டுள்ளன. முகிதி உபநிடதத்தில் உபநிடதங்களின் பட்டியல் 108 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேத கொள்கைகளின் ஆன்மதரிசனம் யோகம், தியானம், கர்மவிணை மறுபிறப்பு போன்ற முன்னைய மர்மமான சமய நெறியில் உபநிடதக்கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. பழமையான குறிப்பிட்ட ஒருவேதத்துடனான பிராமணத்துடனோ அல்லது ஆரண்யத்துடனோ இணைக்கப்பட்டிருந்தன. பிற்காலத்தில் எழுந்த உபநிடதங்கள் அவ்வாறு இணைக்கப்பட்டிருக்கவில்லை. அநேகமான உபநிடதங்களில் விளக்கங்கள் காணப்படாவிடினும் யக்ஞவல்கியர் முக்கிய குருவாக விளங்கியுள்ளார்.

ஏனைய உபநிடத ரிஷிகளாகிய உத்தாவகர், ஆருனி, ஸ்வேதகேது, சாண்டில்யர், அயித்தரேயர், பிப்பலாத, சனத்மோரர் என்போரும் முக்கியமான உபநிடத்தத்துவ தரிசிகளே. மனு, பிரஹஸ்பதி ஜயாசியா நாரதர் ஆகியோர் காலத்தால் முற்பட்ட உபநிதத்துவதரிசிகள் என அறியப்படுகின்றனர்.

எல்லா உபநிடதங்களும் தொன்மையானவை எனக்கருத முடியாது. அவற்றில் பெரும்பாலான பிற்காலப் பகுதியில் எழுந்தவையே. கீழ் காணப்படும் பத்து உபநிடதங்களும் பிரதானமானவை எனக் கொள்ளப்படுகின்றன. அவை (1) ஈசா உபநிஷத் (2) கேன உபநிஷத், (3) கடோ உபநிஷத் (4) பிரச்ன உபநிஷத் (5) முண்டக உபநிஷத் (6) மாண்டூக்கிய உபநிஷத் (7) தைத்திரிய உபநிஷத் (8) ஐதரேய உபநிஷத் (9) சாண்தோக்கிய உபநிஷத் (10) பிருஹத்தாரண்ய உபநிஷத் என்பன. இவை அதிக நம்பகத்தன்மை மேலான்மையும் பழமையும் உள்ளவை எனக் கருதப்படுகின்றன. கௌஸிதகி உபநிடதம், ஸ்வேதஸ்வேராஸ்வதர உபநிடம், மஹாநாராயணிய உபநிடதம் மைத்திரேயானிய உபநிடதம் என்பவையும் ஓரளவு முக்கியமானவை என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இவை கீழ்வரும் ஒழுங்கில் வெவ்வேறு வேதங்களுக்கு உரியதாகும்.

(1) இருக்கு வேதம் - (1) ஆயி ஐத்திரேய உபநிடதம் (2) கௌஷதகி உபநிடதம்.

(2) யஜுர்வேதம் கிருஷ்ணயஜுர் வேதம் (1) கட உபநிடதம் (2) ஸ்வேதஸ்வதர உபநிடதம் (3) மைத்திராயனிய உபநிடதம் (4) மகாநாராணிய உபநிடதம் (5) தைத்திரிய உபநிடதம்

சுக்கில யஜீர்வேதம்: (1) ஈசாவசிய உபநிடதம் (2) பிருஹதாரண்யஉபநிடதம்

(3) சாமவேதம்: (1) கேன உபநிடதம் (2) சாத்தோக்கிய உபநிடதம்

(4) அதர்வணவேதம் டு (1) முண்டக உபநிடதம் (2) மாண்டூக்கிய உபநிடதம் (3) பிரச்சின உபநிடதம்

உபநிடதங்களில் ஆன்மீகத்தத்தவங்களின் விளக்கங்கள் வேதங்களிலிருந்து எடுக்கப்பட்டு தமக்கே உரியபாணியில் வலியுறுத்தப்பட்டுள்ளன. கேன உபநிடதத்தில் உமாஹைமாவதி பிரம்மத்தை ஞானப்பொருளாக விளக்குவதையும், கதா உபநிடதம் நசிகேதனின் உள்ளக்கிடக்கையை எடுத்துக் காட்டுவதாக உள்ளது - நசிகேதன் தனக்குத் தன் தந்தையிடமிருந்து கிடைக்கவிருந்த கொடையை நிராகரித்து யமனிடம் போய் உரையாடி உபதேசம் பெறுவதையும் அவ்வுபதேசத்தில் யமனால் உபதேசிக்கப்பட்ட உலக பொருள்களை விரும்பாது அவையாவும் மாறும் இன்பமாகையால் அவற்றை

மறுத்து மாறாத இன்பநிலையாகிய இறவாமையின் இரகசியத்தை உபதேசிக்கும்படி கேட்டு உபதேசம் பெற்றான். என்பதைச் சொல்கின்றது. இந்த உபநிடத்தில், "பிரமத்தை அறியும் ஞானத்தை வாதிடுவதால் பெறுவது அல்லவென்றும் உள்ளுணர்வு ஒருவர்க்கு உண்டாயின் பிரம்மஞானத்தை பெறமுடியும் என்பதையும் ஒருவருக்குப் போதனை மூலம் உணர்த்துவதால் மட்டுமே கைகூடும் என எடுத்துக் காட்டுவதை நாம் அறியலாம். முண்டக உபநிடதத்தில் பகவத்கீதையின் கருவூலமாகக் கருதக் கூடிய மந்திரம் ஒன்று உள்ளது. கருமங்களைச் செய்வோர் லௌகீக பலன்களில் பலனின்றி ஏமாற்றமடைவதையும், "உலகத்தினது இயல்பை நடைமுறையினை நன்கு ஆராய்ந்து ஒரு கருமத்தின் காரணத்தையும் உள்ளெண்ணத்தையும், அக்கரும முடிவில் ஏற்படும் பயனையும் சீர்தூக்கிப் பார்த்து, அறிந்து கொள்ளவேண்டிய உண்மை கொளுந்துவிட்டு எரியும் அக்கினியிலிருந்து தீப்பொறிகள் கிளம்பி மேலெழுந்து மறைவதைப் போல ஆன்மா உயிரினங்கள் அழிவற்ற பிரமத்திலிருந்தே தோன்றி ஈற்றில் பிரம்மத்திலேயே ஒன்றித்து விடுகின்றது. என்ற உண்மையைக் கூறுகிறது.

பிரமத்தை அறிந்துகொள்ளும் நிலை எய்திவிட்டால் எல்லா ஐயங்களும், மறைந்து செயலாற்றலும் ஓய்ந்துவிடும். தைத்திரிய உபநிடதம் பின்வரும் அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்டது. இவை ஏனைய உபநிடதங்களில் மீளவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. குருவும் சீடனும் சேர்ந்து தத்துவ ஆராய்ச்சியின் மூலமாகவும் ஒரு முடிவிற்கு வருவதைக் காட்டுகின்றது. "குரு, சிஷ்யாகிய நாம் இருவரும் ஒருவருக்கொருவர் உதவுவோராகவும், கடவுளர்களால் காப்பாற்றப்படுபவோராகவும் இருப்போம் ஜீவா தாரத்துக்குரிய பொருளைப் பெற்றுக்கொள்பவராக வாழவேண்டும். எமது ஆன்ம சக்தியை ஒருமித்து அறிவுவளர்ச்சிக்கு பயன்படுத்துவோம். எமது புகழ்பெற்றுத் தருவதாக விளங்கட்டும், நாம் ஒருவருக்கொருவர் பகைமையற்றவராக இருக்க பிரம்மத்தை வேண்டிக் கொள்வோம் சாந்தி, சாந்தி, ஸ்வேதாஸ்வதர உபநிடதத்தில் ஏனைய பிரதான உபநிடதக் கொள்கைகளும் ஒரே கடவுளுக்குப் பக்திபூண்டிருப்பதையும் வளர்ப்பதாக அதன் படிமுறை அமைந்துள்ளது.

ஆரம்பகால உபநிடதங்கள் இருநூற்றுக்கு மேற்பட்ட உபநிடதங்கள் இருப்பினும் தத்துவாசிரியராகிய சங்கரர் (788 -820CE) பதினைந்து உபநிடதங்களையே குறிப்பிட்டுள்ளார். இந்த பதினைந்து உபநிடதங்களும் மைத்தியும் வேதம் சம்பந்தப்பட்டவை எனவும் குறிப்பிடப்படுகின்றன. ஏனைய உபநிடதங்கள், பிற்காலப்பகுதியில் தோன்றின. அவை புராண அடிப்படையில் சிவ சக்தி,

விஷ்ணு வணக்கத்தைக் குறிப்பிடுவனவாகவுள்ளன. மிகப் பழமை வாய்ந்ததுமாகிய மிகநீண்டதுமாகிய பிருஹத் ஆரண்யக உபநிடதமும் சாந்தோக்கிய உபநிடதமும் கி.பி. 7ம் நூற்றாண்டைச்சார்ந்தவை பிடுகஹத் ஆரண்யகத்தில் மூன்று ஆரண்யக அதிகாரங்களும் தொடர்ந்து ஆறு உபநிடத அத்தியாயங்களும் உண்டு.



புரோஹிதர் உயர்ந்த குறிக்கோகளை அடைய விருப்புடன் உச்சாடனம் செய்யும் பின்வரும் உபநிடதங்களில் கூறிப்பிடப்பட்டுள்ளது.

மாயையிலிருந்து என்னை உண்மைக்கு இட்டுச்செல்க இருளிலிருந்து என்னை ஒளிக்கு இட்டு இறப்பிலிருந்து இறவாமைக்கு என்னை இட்டுச் செல்க.

ஒருவரின் ஆன்மா மற்றெல்லா உயிரினங்களின் ஆன்மாவுடன் ஒன்றியதாக உள்ளதென்பது உபநிடதங்களின் முதன்மையான செய்தியாகும். இந்த உணர்வுடன் தியானஞ் செய்யும்போது ஒருவர் தானே பிரம்மம் என உணரத் தலைப்படுகிறான்இ அதுவாகவே அவர் ஆகிவிடுகின்றார். அவர் அழிவற்ற நிலையை அடைந்து விடுகின்றமையும் தான் விரும்பும் ஏதாவதொன்றைப் படைக்கும் ஆற்றலையும் பெறுகிறார். சத்தியத்தை பிராணன், நாமம், ரூபம், உடைய ஒன்றாக இனங்காணலாம் இது மறைக்கப்பட்ட நிலையிலிருந்து உயர்ந்து, இருதய ஆகாயவெளியில் இயங்கி, பிரமத்தைக் காணக்கூடியவாறு பரிணாமமடைகின்றது. லௌகீக நிலையில் நாம ரூபங்கள் மாயைத்தோற்றமாக போலியான தோற்றத்தை உடையதாக பிராணன் பல உடல்களில் நிலைத்திருப்பினும் ஆன்மா ஜீவாத்மா என்ற நிலையிலிருந்தும் அது அழிவில்லாத சத்தியப் பொருளாகவே - சத்தியத்தின் சத்தியமாகவே விளங்குகின்றது. இறவா என்ற மேண்மை நிலையை எய்துவதற்கான மார்க்கம் இலகுவானதொன்றல்ல. இறவாமை என்னும் நிலையை பொருள் கொடுத்துப் பெறமுடியாது. உலகில் உள்ள அனைத்து மனிதர்களும் பொருட்களும் பெறுமதி வாய்ந்தவை.

ஆன்மா இது அல்ல, அதுவும் அல்ல அது விளங்கிக்கொள்ள முடியாதது. அது விளங்கிக்கொள்ளாதது

அது அழிவில்லாதது அது ஒருபோதும் அழியாதது

அது ஆசையில்லாதது அது தன்னை எவற்றுடனும் சேராதது

அது விலங்கிடப்படாதது அது துன்பப்படாதது காயப்படாதது

ஆன்மா புத்தியுள்ளது அரியது உண்மையானது, முடிவற்றது, ஆனந்தமானது நிலையானது பிறப்பின்மூலம் உடல்பெற்ற தீவினையை இறப்பின்போது பின்தள்ளப்படுகிறது மரணத்தின்போது ஆன்மா முதலிலும் உயிர் பின்னரும் ஈற்றில் இறுதி மூச்சும் வெளியேறுகின்றன. ஆன்மா எல்லாத் தொழிற்பாடுகளிலும் இயங்கி ஆக்கம் பெறுகிறது. நன்மை செய்வோன் நல்லவனாகவும் தீமை செய்வோன் தீயவனாகவும் மாறுகிறான். இந்த உலகில் எவ்வகையான கர்மத்தை ஒருவன் செய்கின்றானோ அது அடுத்த பிறவியில் பிரதிபலிக்கிறது. எனவே மனோவேகத்தை அடக்கி மட்டுப்படுத்தி வாழ்ந்து, பூரண விடுதலை பெற்று இறவாமை நிலையூடாக பிரம்மநிலை பெறல்வேண்டும்.



சாந் தோக்கிய உபநிடதமும் சாந்தோக்கிய பிராமணமும் தமது முதல் இரண்டு அத்தியாயங்களில் வேள்வி, மற்றும் பல்வேறு விதமான வழிபாடுகள் பற்றிய கலந்துரையாடல்களைக் கொண்டுள்ளன. சாமவேதத்தின் ஒரு பகுதியாக பாடல்களைப் பற்றி சாந்தோக்கிய உபநிடதம் கூறுகிறது. ஓம் என்ற பிரணவத்தை உச்சாடனம் செய்வதை இவ் உபநிடதம் வலியுறுத்தியுள்ளது. பிரணவத்தை உச்சரிப்பது உயிர்மூச்சுடன் (பிராணுடன்) தொடர்புடையது இவ்வாறு உச்சாடனம் செய்யும் பிரணவ ஓங்காரத்தொனி பேய் பிசாசுகள் போன்ற துஷ்ட தேவதைகளை வலிகுன்றச் செய்து அவற்றின் தீமைகளை அகற்றி ஓதுபவரை என்றும் காக்கின்றது. சாந்தோக்கிய உபநிடதத்தில் மூன்று பகுதிகள் உண்டு. முதலாவது வேள்வியை செய்து வேதம் ஓதல் தானம் அளித்தல், இரண்டாவது மிக உளிமையான வாழ்வு வாழ்தலும், மூன்றாவது, ஆச்சாரியருடன் புனித ஞானத்தைக் கற்றல் சேர்ந்து அவருடன் வசித்து பணிவிடை செய்து புனித ஞானத்தை இதயத்தில் உள்ள உயிர் பிரம்மத்தைக்குறிக்கின்றது. அதுவே மோட்சத்தில் பிரகாசிக்கும் ஒளியைக் காட்டிலும் உயர்ந்தது. உயிரைப் பற்றிய பூரணமான அறிவுள்ள ஒருவனுக்கு தீவினைகள் ஒட்டிக்கொள்வதில்லை. வேள்வியில் தோன்றும் யாகாக்கினியை துதித்துப் போற்றுபவர் தீவினைகளைப்புறந்தள்ளி அவை தன்னை அண்டாமல் இருக்கும்படி செய்யவல்லவர் தாமரையிலையில் தண்ணீர் ஒட்டிக் கொள்வதில்லை. அதுபோலவே தீவினைகள் வேள்வி செய்வோரை பற்றிக் கொள்வதில்லை.

உண்மையாகவே சொல்கிறோம் ஆன்மா உடலைவிட்டு நீங்கும்போது இறக்கின்றது. என்றும் வாழும் ஆன்மா இறப்பதில்லை. ஆன்மாவுக்கே இவ்வுலகில் ஒன்று உண்டானால் அது வேவொன்றும் அல்ல. சூக்குமமான இந்த நிலையான தன்மை இதுவே அதன் சாராம்சம் இதுவே சத்தியப்பொருள். இதுவே உண்மைப்பொருள் (ஸ்வேதகேது 16)

தைத்திரிய உபநிடதத்தில் "ஓம்" என்ற பிரணவ பொருள் வலியுறுத்தப்பட்டுள்ளது. இது ஆன்மாவின் சாந்தியாக (அமைதியாக)க் காட்டப்பட்டுள்ளது. "ஓம்" என்ற பிரணவப் பொருளுடனேயே வழிபாடு தொடங்கி முடியும் பிரம்மமே சத்தியம், ஞானம், அளவிடமுடியாத சிவப் பொருள். இதை அறிவோர் பிரம்மஞானிகளாக வாழ்வர்.

ஐதரேய உபநிடதத்தின் ஆரம்பத்தில் "பரமாத்மாவிலிருந்து பிரபஞ்சம் தோன்றியதெனக் கூறும். ஹிரண்யகர்ப்பத்"திலிருந்தே மூச்சு, கண்கள், பார்வை, காட்சி, செவி, கேட்கும்திறன், தோல், முடி (மயிர்) பூண்டுகள் தோன்றினவென்றும் தொப்புளாகிய நாவிலிருந்தும் மூச்சில் மரணமும், இன்பத்துக்குரிய அவயங்களிலிருந்து தோன்றும் விந்துவும் அப்புவும் (நீர்) தோன்றும் இவை உரியமுறைப்படி வழிப்படுத்தப்பட்டு இயக்கப்படுகின்றமைக்கு மூல காரணமாக பிரம்மம் விளங்குகிறது. இவ்வுலகில் ஞானத்தைப் பெற்ற ஆன்மா மோட்சத்தில் பெறும் நிலை பற்றி பல இடங்களில் கூறப்பட்டுள்ளன. கௌரீதக்கி உபநிடதத்தின்படி இறவாமையை பெறுதலும் ஆன்மா திரும்பத் திரும்ப கர்மங்களின்பலனை அனுபவிப்பதற்கே என்று கூறப்பட்டுள்ளது.

இறுதியாக பிரமத்தின் ஆன்மாவை அறிந்தேன் நன்மை தீமை ஆகிய செயல்களும் தேர் ஓட்டும் சாரதிக்கு தேரின் இரு சக்கரங்களும் சமமாகத் தொழிற்படுதலைக்கவனித்துப் பார்ப்பது போல, மேம்பாடு அடைகிறான். கூடுதலான நன்மையான செய்கைகளால் நன்மையையும் தீய செயல்களால் தீமைகளையும் அடைவதனால் ஒருவன்மேலானவனாகிவிடுவதில்லை. சுவர்க்கத்துக்கும் நரகத்துக்கும் எம்மை இட்டுச் செல்வது நாம் இவ்வுலகில் செய்த நன்மை தீமைகளே. நற்செயல்களால் மேலோனாகவும் தீச்செயல்களால் கீழ்நோக்கியும் உயர்த்தப்படுவதோடு தாழ்த்தப்படுவதோ இல்லை. எனவே ஒருவரின் ஆத்மா தகுதியான உலகிற்கு இட்டுச்செல்லப்படுவதும் அவனுடைய இவ்வுலக செயற்பாடுகளின் தன்மையாலேயே அனுபவிக்கும் ஒவ்வொன்றுக்கும் ஆன்மாவே முழுப்பொறுப்பையும் ஏற்கும் நிலைப்பாடு உள்ளது. உபநிடதங்களின் அடிப்படைத்தத்துவங்கள் உபநிடதங்கள் அடிப்படைத் தத்துவங்களாக ஆறுமகா வாக்கியங்களில் இருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

1. "அஹம்பிரமாஸ்மி" - "நான் பிரமம்" இது ஞானி ஒருவனின் மனச்சாட்சிப்படி தன் ஆன்மா மேலான சத்தியப்பொருளாகிய பிரமத்துடன் வேறுபடாத ஒன்று என்பதை உணர்ந்த நிலையாகும்.

   வேத கடவுள் நாமம், பெயர், மேலான இரட்சகர், என்ற வரைவிலக்கணத்தில் அடக்கப்படவில்லை. ஒரு புனிதமான தனிநபரிலோ ஒரு குறிப்பிட்ட ஒரு சிலையிலோ அல்லது எண்ணத்திலோ அல்ல என்பதும் உபநிடதங்களில் தெளிவாகவும், ஆத்மாவை விடவேறொரு சத்தியப்பொருள் ஒன்றை நாம் வழிபடுவதால் நாம் தாழ்வடைந்து நம்மையே இழந்துவிட நேரிடும் என்றும் உபநிடதங்கள் கூறுகின்றன. எமக்குச் சொந்தமான உயிரே ஆன்மாவே உண்மையான சத்தியம்.

அண்டவெளியாகிய ஆகாயத்திலும் இருதய ஆகாசத்திலும் நிறைந்து நிற்கும் வரம்பற்ற ஆற்றலுடைய ஒன்று அது எனக்கொள்ளப்படுகின்றது.

2. "அயம்" ஆத்ம பரம்மா"- தன்னில் உள்ள உயிர் இயக்கம் பிரம்மா" இதுவும் மேற்கூறியதையே அவையாக கூறுகிறது. என்னிடத்தில் உள்ளதும் அல்லாமல் ஏனைய எல்லா உயிரினங்களிலும் நிலைத்திருக்கும் பூரணமான சத்தியமே பிரம்மம் என்கிறது.

3. தத்துவம் அசி - (That thouast) "அது நீயாகவே இருக்கிறாய்" எதைப் பார்க்கிறோமோ, எதைப்பற்றி நினைக்கிறோமோ, நாம் அதுவாகவே இருக்கிறோம். நான் அது மட்டும் அல்ல. நீயும் அதுவே" மற்றெவைகளிலும் உள்ள முடிவான ஒன்றே நானும் நீயுமாகிய ஆகிய நாங்கள். மற்றவர்களின் மனச்சாட்சி தெய்வீகம்.

4. பிரஜ்ஞானம் ப்ரமம் மெய்கண்ட உண்மை காணும் அறிவே பிரம்யம். உமது சூட்சும அறிவே உண்மை. அதுவே சத்தியம். நமக்குள்ளே இயல்பாக உள்ள சூட்சும அறிவே பிரமத்திடம் எம்மை அழைத்துச் செல்லும் அது தெய்வீகமானது பூரணமான ஒன்றுடன் ஒன்றிணைவதற்கு மேலானசத்தியப் பொருளான சூட்சும அறிவே சத்தியபிரமம்.

5. "சர்வம் கல்விதம் பரமம்" பிரபஞ்சமே தெய்வீகமானது நாமும் அதனுள் அடக்கம் எனக்கும் உனக்கும் உள்ள உள்ளுணர்வுக்கோட்பாடு மற்றெல்லா உயிரினங்களிலும் நிலவும் உள்ளுணர்வுக் கோட்பாடாகிய பிரம்மமே. ஒன்றில் எல்லாமும், எல்லாவற்றிலும் ஒன்றும் என்ற நிலைப்பாடு.

6. "சோ ஹம்" அவனே யான் பிரமத்துடன் தான் ஐக்கியப்பட்டமையை தெளிவாகக் குறிப்பிடுகிறது இம்மந்திர மஹாவாக்கியம் மூச்சில் - பிராணனாக நின்று இயற்கையான தொழிற்பாடாகியுள்ளது பிரம்மம், மூச்சை உளிழுத்தலாகிய "சோ" என்பது இயற்கையான தொழிற்பாடு, "ஹம்" என்பது மூச்சை வெளிவிடும் தொழிற்பாடு. சத்தியமாக விளங்கும் பிரத்தின் பேராற்றலுடன் வேறுபடாது ஒன்றி நிற்கும் தன்மையைக் காட்டுவது யாவும் "ஓம்" என்ற பிரணவத்திலிருந்து தோன்றி ஈற்றில் அதனுடன் சங்கமித்து விடுகின்றன. நானே யாவும் என்பதும் "ஓம்" என்பதும் மற்றும் மகாவாக்கியங்களும் குறிப்பது ஒன்றே.

இதிகாச காலமும் இலங்களும் புராதன புராண இலக்கியங்களும்

இதிகாசங்கள்:

கதைகள் மூலம் இந்து சமயத்தின் அடிப்படை அம்சங்களையும் பொது மக்களின் மனதில் நன்கு பதித்து விடவல்லவை இதிகாசங்கள் வேதங்களின் குறிக்கோள்களையும் ஸ்மிருதிகளின் சட்டங்களையும் நியதிகளையும் மக்களிடம் நிரந்தரமாக மனப்பதி செய்துவிடவல்லவை இவை இதிகாசக் கதைகளில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள பாத்திரங்களின் குணாதிசயங்களும் வீரதீரப்பிரதாபங்களும் இந்துக்களுக்குப் பண்பாட்டுக் கலாச்சார ஊற்றாக விளங்குகின்றன. முக்கியமாக கம்பீரமான பெருவாழ்வுக்கும் மேலான எண்ணங்களுக்கும் வழிகோலிவிடுவதாக அவை துலங்குகின்றன.

பிராமணங்களில் கூறப்பட்டுள்ள சூத்திரங்களையும் உபநிடதங்களின் மேலான தத்துவப் பொருளையும் சாதாரண மக்கள் வினாவாக கொள்வதில் உள்ள இன்னல்களை விலக்கி, அவர்களும் வேதத்தின் சாராம்சங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு வான்மீகி ரிஷியும், வியாசரும் மக்களுக்காகவே இவற்றை எழுதினார்கள். மனித குலத்துக்கு நன்மையை அளிக்கும் நோக்கமாக, வேதோபநிடத தத்துவங்களை இதிகாசக்கதைகள் மூலம், மக்கள் மனதில் பதியும்படி கரிசனையுடன் ஆக்கியுள்ளார்கள்.

இதிகாச காலமான கி.மு. 400 - கி.பி 400 ஆண்டு காலத்தில் இந்தோ ஆரியர்கள் வட இந்தியாவில் கங்கை நதிப் பள்ளத்தாக்கில் குடியேறிய அங்கு ஏற்கெனவே வாழ்ந்த மக்களுடன் சங்கமித்து, ஆரிய சமயக் கருத்துக்களை இந்து நதிப்பள்ளத்தாக்குமக்களின் சமயத்தில் ஊடுருவி

நிலைக்கும்படி செய்தார்கள். இந்தக் காலப்பகுதியிலேயே இதிகாசங்கள் தோன்றின. இவை அரச தருமநெறிகளையும் சமூகக்கட்டுப்பாட்டு நெறிகளையும் வேததர்மத்தின் அடிப்படையான கொள்கைகளையும் பாதுகாக்கும் பொருட்டு எழுதப்பட்டவை இதனால் வேதநெறி உபகண்டத்தில் தழைத்தோங்கிய.

பக்தி நெறியை பகவத்கீதை புதியதோர் முறையில் எடுத்துரைக்கின்றது. அவதாரக் கோட்பாட்டின் ஓர் அம்சமாக கிருஷ்ண அவதாரம் கூறப்படுகின்றது. மநுநீதி - மநுதர்மசாஸ்திரம் பாரத சமுதாயத்தின் சிறப்பினையும் அப்பாரத சமுதாய சிறப்பு முறையை நிலைபெறத்தக்கதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இதிகாசகாலக்கட்டத்தின் ஒரு சிறப்பான பெறுபேறாக இது கருதப்படுகின்றது.

இதிகாச இலக்கியங்கள்- மகாபாரதமும் இராமாயணமும்

நவீன ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி இதிகாசங்களாகிய இராமாயணமும் மகாபாரதமும் உண்மையான - வரலாற்றுக்குறிப்புகள் எனக் கொள்ளப்படுகின்றன. அவை வெற்றுக் கட்டுக்கதைகள் அல்ல எனச் சமீபகாலத்தில் கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. "இதிகாசம்" என்ற சொல்லின் பொருள் "இது இப்படி நடந்தது" என்ற இந்து சமய தத்துவங்களுடன் இராமயணமும் மகாபாரதமும் பின்னிப் பிணைந்துள்ளன. இன்றுவரை அவை பக்தியையும் அவதாரக்கோட்பாட்டு நெறியையும் வளப்படுத்தி வருகின்றன.

ஆதி காவியம் எனப் போற்றப்படும் முதன்னூலாகிய இராமாயணம் உதாரண புருஷரான இராமனைப் பற்றிய வரலாற்றை கூறுகின்றது. சூரிய வம்ச ராஜகுலத்தை இ'வாகுவின் பரம்பரையிலிருந்து பெயர்குறித்து சரித்திர ரீதியாக எடுத்துரைக்கின்றது. விஷ்ணுவின் அவதாரச் சிறப்பையும் அவருடைய உடன் பிறப்பினராகிய பரத இலக்குமண, சத்ருக்கினர்களின் கீழ்ப்படிதல், அறிவாற்றல் ஒழுக்கமுறை, தர்மீக சிந்தனை முதலான சிறப்பியல்புகளையும் வாழ்க்கையில்இடம்பெறும் அவலங்கள், நலங்கள், போர், யாகசம்ரச்சணம் முதலானவற்றைப் பற்றி வரலாற்றுக் குறிப்புடன் எடுத்துக் கூறுகின்றது. சீதை, அநுமான் போன்ற இதிகாச கதாபாத்திரங்கள் இன்றுவரை மக்கள் மனங்கவர்ந்தவர்களாக பக்தியையும் நல்லொழுக்கத்தையும் - எல்லாவற்றுக்கும் மேலாக இந்து தர்மத்தையும் சாதாரண இந்து மக்களிடம் வேரூன்றச் செய்து அவர்களுடைய வாழ்க்கையை மேலோங்கச் செய்கின்றது. இராமனின் ஜனனம், வளர்ப்பு, கல்வி, ஆச்சிரம வாழ்க்கை, திருமணம், வனவாசம், சீதையை இராவணன் கடத்தியமை, இராமாயணப்போர் மூலம் சீதையை மீட்டுவருதல், லங்காதகனம் இராவணவதம் போன்ற சம்பவத் தொடர்கள் அத்தியாயங்களாக இராமயணத்தில் பாடப்பட்டுள்ளன. சமஸ்கிருத மொழியில் இராமாயணம் என்பது இராமனின் பிராயணம் (அயனம்-பிரயாணம், சஞ்சரித்தல்) என்பதைக் குறிக்கின்றது. இந்து ஸ்மிருதியின் இப்பகுதியாகிய இராமாயணம் வான்மீகி முனிவரால் எழதப்பட்டது. இந்நூல் 24,000 பாடல்களை ஏழுகண்டங்களைக் கொண்டுள்ளது. வருங்கால சந்ததியினருக்கு ஓர் ஆதாரசுருதியாகவும் போற்றப்படுகிறது இராமாயணம். திரேதாயுகத்தில்,

வானசாஸ்திர அறிவியலின்படி கி.பி.3000ல் எழுதப்பட்டதாக அநேக அறிவாளிகள் கணக்கிட்டுள்ளதாக அறியக் கூடியதாகவுள்ளது.

காலம் வகுத்தல்

கி.மு 4ஆம் - 2ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இராமாயணம் எழுதப்பட்டதாகக் கொள்ளப்படுகின்றது. இராமாயணகாவியத்தின் முதல் பகுதியும் கடைசிப் பகுதியும் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டதாக நம்பிக்கையொன்று நிலவுகிறது. இரண்டாவது காண்டத்தில் தொடங்கி ஆறாவது காண்டம் வர கூறப்பட்டுள்ள நுணுக்கமான செய்திகளில் இராமனை ஓர் இலட்சிய புருடனாகவே கூறப்பட்டுள்ளது இராமாயணத்தின் முதலாம் காண்டத்திலும் ஏழாவது காண்டத்திலும் ஓர் அவதார புருடனாகவே - (விஷ்ணுவின் அவதாரமாக) கூறப்பட்டுள்ளது. பஞ்சாங்கங்களின்படியும் பரம்பரையான வானசாஸ்திர கணிப்பினாலும் அறியக்கூடிய பின்னூட்டல் முறையாலும் இராம இராவண யுத்தம் 2006ம் ஆண்டிலிருந்து பார்க்கும்போது, 880148 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றிருக்க வேண்டும் என அறியக் கூடியதாகவுள்ளது.

இந்து சம்பிரதாயத்தின்படி இராமன் விஷ்ணவின் ஓர் அவதாரமென்றும் இவ்வவதாரத்தின் நோக்கம் இப்பூவுலகில் மனிதன் வாழ்வாங்கு வாழும் முறை பற்றி தானே வாழ்ந்து காட்டுவதற்காகவும் உண்டாகியது என்பர். ஈற்றில் இராமன் இரட்ச அரசனாகிய இராவணனை கொன்று நல்லொழுக்கச் சமய சன்மார்க்க வாழ்வுநெறியின் மேன்மையை உலக மக்களுக்கு எடுத்துக்காட்டாகவும் இந்து தர்மத்தை பூவுலகில் நிலை நாட்டவும் எழுதப்பட்டதாகும்.

கௌடில்ய வைஸ்ணவ ஆச்சாரியராகிய ரூபகோஸ்வாமி தாம் செய்த "பகவத்தமிர்தம்" என்னும் நூலில் (1.3.78) இராமாயணம் 24 வது சதுர்யுகத்தில் எழுந்ததென்று கூறுகிறார். தசரதரினதும் கௌசலையினதும் திருமகனாகவும், சுமித்திரையின் இரு புத்திரர்களாகிய இலக்குமண சத்ருக்கனாகளாலும் கைகேகியின் மகளாகிய பரதனுடனும், அறுகம்புல்லின் பனித்த இனந்தளிர்போல திரேதாயுகத்துக்குச் சமமான 24வது சதுர்யுகத்தில் இராமன் அவதரித்தார் என்றும் குறித்துள்ளார்.

இராமயணத்தின் படிப்பினைகள்

1. தர்மம் இராமனுடைய உருவம், இந்துசமயத்தில் நம்பிக்கையாகக் கடமை என்பது இராமனாக உருவகிக்கப்பட்டுள்ளது.
2. இராமன் உத்தம புத்திரனாக, அரசனாக, கணவனாக விளங்கினான்.
3. சீதா ஒரு சிறந்த பத்தினியாக விளங்கினாள்.
4. பரதனும் இலக்குமணனும் உத்தமமான சகோதர்களாக விளங்கினர்.
5. அனுமான், அகம்பாவமில்லாத அன்புள்ள பக்தனாக தொண்டனாக விளங்கினார்.

6. மோகமும், தன்முனைப்புள்ள ஆணவத்தின் அபாயத்தை இராவணனின் உருவகத்தில் காணலாம்.

மகாபாரதம்

இரு இதிகாசங்களில் மகாபாரதமும் முக்கியமான இடத்தை வகிக்கிறது. ஆழ்ந்த சமய, தத்துவார்த்தங்களை, அது கொண்ட மகாபாரதம் என்பதன் அர்த்தம் பெரியதோர் பாரவரலாற்றின் இதிகாசம் (பரதனின் வம்ச பரம்பரை வரலாறு பாரதம் என்பது பாரத வர்ஷம்" ராச்சியத்தினை நிலைனாட்டிய பரதனின் இராச்சியம் என்பது பொருள் மகாபாரதம் 100,000 பாடல்களைக் கொண்டது மகாபாரதத்தின் பெருமையையும் நோக்கத்தின் வீச்சும் ஒரு சுருக்கமான எடுத்துக்காட்டாக இதனை முதலாம் பாவதத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. "இங்கு காணப்படுவது வேறெங்கும் காணக்கூடும். இங்கு காணப்படாதவை வேறெங்கும்இருக்கமாட்டாது. மகாபாரதக் கதையின் கரு, அத்தினபுர ஆட்சிக்கு உரிமைகோரி, சகோதரர்களுக்கிடையே ஏற்பட்ட பிணக்கு குடும்பங்களுக்கிடையேற்பட்ட திராப்பகை குருகுல ராஜவம்சம் இருகிளைகளைக் கொண்டது. கௌரவர்கள்பாண்டவர்களின் பகைமையின் காரணமாகவே பாரதப்போர் குருஷேத்திரத்தில் நடந்தது. ஈற்றில் பாண்டவர்கள் போரில் வெற்றிபெற்றனர். கலியுகத்தின் ஆரம்பத்திலேயே இப்போர் நடந்தது. 18நாட்கள் நடைபெற்ற இப்போரில் எண்ணற்ற பெருங்குணசாலிகளும், வீரர்களும், பிரபுக்களும், காலாட்படையினரும் இரதங்களும், யானைப்படைகளும், குதிரைப்படைகளும் அழிந்தன. உலகிலே நடந்தபோர்களில், அது குறிப்பிடுதற்கு முக்கியமானதாகக் கொள்ளப்படுகின்றது. தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் இடையே நடந்ததுஇப்போர் எனவும், மனித வரலாற்றிலேயே மிகப்பெரிய இழப்பை இது ஏற்படுத்தியது எனவும், மனிதவர்க்கத்தின் உயர்நோக்கும் அரும்பெரும் விழுமியங்களும் தாழ்மையெய்தி உதிர்ந்து பொடிப்பொடியாகிவிட்டதென்றும் சொல்லப்படுகிறது. மனித நாகரிகத்தின் உச்சியில் நின்றிருந்த எண்ணற்ற உத்தமர்களும் இராஜவம்சத்தின் கிளையுடன் சேர்ந்த உறவினர்களும் தம் நிலைதடுமாறி கலந்து கொண்ட மகாபாரதப்போர் மனித நாகரிகத்தின் உச்சிக்காலத்தில் நடைபெற்ற நான்காவதும் கடைசியானதெனவும் கூறப்படுகின்றது. தர்மம் நிலைகுலையும் தொடக்கமாகிய கலியுகத்தில் அழிவுற்ற ஓர் உண்மையை அறியக்கூடியதாக இருக்கின்றது. கிருஷணத்துவைதம்பாயனர் என்று வழங்கப்பட்ட வியாசபகவானால் பாடப்பட்ட இவஅரிய இதிகாசம் பலப்பல நல்லுபதேசங்களுடன் அரியவரவாற்றுக்கதைகளையும் தன்னகத்தே கொண்டு வேதசாரமாக விளங்குகின்றது. வாழ்க்கையில் ஒருவர் கடைப்பிடிக்க வேண்டிய காம ஆர்த்த, தர்ம, மோட்சமென்னும் நான்கு தர்மங்களைப் பற்றி வேதவியாசர் நன்கு விளக்குவதற்காகவும் மக்கள் இவற்றை கடைப்பிடித்து வாழ்வதற்காகவும் மகாபாரதத்தை எழுதினார். கர்மமும் தர்மமும் இதிகாசத்துக்கு பூரணத்துவத்தை ஊட்டுகின்றது. மோட்சத்தில் முடிவடையும் இவ் இதிகாசம் பாண்டவர்கள் இமாசலத்தில் யாத்திரைமேற்கொண்டு செல்வதையும் ஒருவர் பின் ஒருவர் யாத்திரை தேற்கொண்டு செல்வதையும் ஒருவர் பின் ஒருவர் மொட்சப் பிராப்தி அடைவதையும் சொல்கிறது. இதில் கூறப்பட்டுள்ள 18 பர்வதங்களும் பின்வருவன.

1. ஆதிபர்வம் - பாண்டவ ராஜகுமாரர்களின் பிறப்பு வளர்ப்பு.

2. சபாபர்வம் - இராஜ சபையில் வாழ்வு, சூதாட்டம், பாண்டவர்கள், அஞ்ஞாதவாசம், தேசாந்தரவாழ்வு, மயன்கட்டிய இந்திரப்பிரஸ்த அரசமாளிகை.

3. ஆரண்யகபர்வம் - 12 வருடங்கள் வனவாசமும் 1 வருடம் அஞ்ஞாதவாசமும்.

4. விராடபர்வம் - விராட மன்னனின் அரண்மனையில் மாறுவேடத்தில் பாண்டவர் வசித்தல்.

5. உத்யோகபர்வம் - பாரதப்போருக்கு ஆயத்தம் செய்தல்.

6. பீஷ்மபர்வம் - போரின் முதல் பகுதி - கௌரவருக்கு பீஷ்மரின் சேனாதிபதி பதவி.

7. திரோணபர்வம் - துரோணரின் சேனாதிபதித்துவத்துடன் போர்தொடர்தல்.

8. கர்ண பர்வம் - கர்ணன் சேனாதிபதித்துவம் போர் தொடர்தல்.

9. சல்லியபர்வம் - போரின் அந்தம் - சல்லியனின் சேனாதிபதி

10. சௌப்திகபர்வம் - அஸ்தவத்தாமன் பாண்டவசேனையை துயிலும் போது கொன்றமை.

11. ஸ்திரிபர்வம் - காந்தாதி முதலியோர் இறந்தோக்கிரங்குதல்.

12. சாந்திபர்வம் - யுதிர்ட்ஸ்ரருக்கு முடிசூட்டுதல். பீமர்: பீமர் உபதேசம்

13. அனுசாசன பர்வம் - பீமரின் கடைசி உபதேசம்.

14. அஸ்வமேதிகாபர்வம் - யுதிஸ்ர்டர் செய்த இராஜசூயமும் அஸ்வமேதயாகங்களும்

15. ஆஸ்ரமவாசிகாபர்வம் - திருராஷ்டன், காந்தாரி, குந்தி ஆச்சிரமமடைதலும், ஈற்றிலும் மரணித்தல்.

16. மௌசலாபர்வர் - யாதவர்கள் தங்களுள் தண்டாயுத போரிடுதல்.

17. மகாபிரஸ்தானிகபர்வம்- தருமருமதம்பியரும் மரணாத்துக்கு போதல் - 1ம் பகுதி.

18. ஸ்வர்காரோஹணபர்வம்- பாண்டவர் சுவர்க்கமடைதல்

இவைதவிர, அநுபந்தமாக 16, 375 பாடல்களைக் கொண்ட ஹரிவம்சபர்வம் -

1. கிருஷ்ணபரமாத்மாவின் வாழ்க்கையைக் கூறுகிறது. பகவத்கீதை, அர்ஜுனனுக்கு கீதையை உபதேசித்தல் - பீஷ்மபாவத்தில்)

2. தமயந்தி நளமகாராஜன் - சூதாடி நாடு இழந்து காடுதல் - ஆரண்யக பாவம்.

3. கிருஷ்ணாவதாரம் - கிருஷ்ணலீலா

4. இராமனின் குறுகிய சரித்திரம் - ஆரண்யகபர்வம்

5. நிஸ்யசிருங்கர் - இராஜய சிருங்கர் எனவும் குறிக்கப்பட்டிருந்தது.

6. விஷ்ணு சகஸ்ரநாமம் - அனுகாசனபர்வம் (1000) நாமங்களை தொகுத்து அருளப்பட்டது)

பகவத்கீதை

கிருஷ்ணபரமாத்துமாவுக்கும் அர்ஜுனனுக்கும் இடையே நடைபெற்ற சம்பாஷணை. இது மகாபாரதத்தில் மிகவும் முக்கியமான பகுதியாகும். போர் துவங்கமுன்னர் செய்யப்பட்டது. இந்து தர்மத்தின் சாரமாக வேதங்களின் உட்பொருளைத் திரட்டியும் உபநிடத சாரமாகவும் இது இருக்கின்றது. கீதா இறையுணர்வு பெறுதலையும் தர்மத்தைகடைப்பிடித்தொழுகுதலையும் உபதேசம் செய்கின்றது- இது ஒரு யோகம்.

புராணங்கள்

புராணங்க்ள வேதகாலத்துக்கும் இலக்கிய சகாப்த காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தே தோன்றின. இவை வரலாற்று வடிவிலும் கதைவடிவிலும், நீதியையும் தர்மத்தையும் வலியுறுத்தும் சிறிய கதைகளாகத் திகழ்கின்றன. இவை, சமய தத்துவங்களை படிப்பறிவில்லாத பாமரமக்கள் விரும்பிக் கேட்டு, வாழ்வில் கடைப்பிடிக்கும் வகையில் இருந்தன. புராணங்கள் சமூக வாழ்க்கையில் இடம் பெறும் பற்பல துறைகளை ஒட்டிய விடயங்களையும், சம்பவங்களையும், களியாட்டங்கள் விழாக்கள் போன்றவை பற்றி எடுத்துக் கூறுவதால் பொதுவாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. பொதுவாக தெய்வ நம்பிக்கையை வளர்ப்பதில் பக்தி என்னும் இழைபுராண இலக்கியங்களில் ஊடுருவி இருப்பதைக் காணலாம். அறிவு ஊட்டக்கூடிய அம்சங்களை கதைகளினூடே கூறும் தன்மையால் இப்புராணங்களைக் கரிசனையோடு கேட்பவர்கள், இலக்கணம், மொழியாற்றல், நீதிசாஸ்திரம், சமூக நீதி, தர்க்கம், யாப்பு ஆக்கம், பிரசங்கம் செய்யும் ஆற்றல் வில்வித்தை போர்ப்பயிற்சி, யானை, குதிரைகளைப் பராமரித்தலுடன் அவைகளை ஏவிப்பணித்தல், சவாரிமுதலிய இன்னோரன்ன கலைகளையும் மதிநுட்பமுடைய மாணாக்கர்கள் கற்று அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. இன்றும் மொழியறிவு, இலக்கண இலக்கியங்களை கற்போர்க்கு புராணங்கள் சிறந்த வழிகாட்டியாக உள்ளன. புராணங்கள் ஸ்ருதி - சம்ஹிதை என்ற ரீதியில் கருதப்படுகின்றன. ஐந்து அம்சங்களைப் புராணங்கள் அவயங்களாக உடையன. அவை

1. வரலாறு
2. பிரபஞ்சவியல்
3. இரண்டாந்தரத்தில் வைக்கப்படும் படைப்பியல்
4. அரசர்களின் வம்சவரலாறு
5. மனுவந்தரம்.

புராணங்கள் 18ம் வியாசபகவானால் காலம்தோறும் அருளப்பட்டது. பராசரின் மகனாகிய கிருஷ்ணத்துவதைம்பாயனர் என்னும் வியாசரே இவற்றை பார்த்தார். தேவசாரமாக இவை ஏற்றுக்கொள்ளப்பட்டன. மக்களுடைய மனத்தைப் பக்தியில் தழைக்கச் செய்யவும் வேதங்களின் போதனைகளை ஓரளவாவது மக்களிடையே பரப்பவும் புராணங்கள் உதவின. புராணங்கள் வாயிலாக அன்றைய சமுதாயம் சமயவாழ்வும், நல்லொழுக்கமுடையதாக அமைந்திருந்தது. ஸ்ரீமத் பாகவத புராணம் விஷ்ணு புராணம் மார்க்கண்டேய புராணம் என்பன புராண இலக்கியங்களில் தலை சிறந்தவனாக கொள்ளப்படுகின்றன. இன்றும் புராணங்கள் மக்களிடையே செல்வாக்கு பெற்று விளங்குவதை அறியலாம். பிரபஞ்சத்தில் சாதாரண மக்கள் கண்களுக்குப் புலப்படாத பல அரிய விடயங்கள் பற்றிய விவரங்களைக் காணலாம். மிகப் பழமையான கால கட்டத்தை உள்ளடக்கிய வரலாற்றுச் சரிதங்களைக் கொண்டுள்ளன. அவை பல்வேறுபட்ட விடயங்களை உள்ளடக்கியருப்பதால் வாசிப்போருக்கும் கேட்போருக்கும் மிகவும் ஆவலைத்தூண்டுவனவாக அமைந்துள்ளன.

ஸ்ரீமத் பகவத புராணமும் தசாவதாரங்களும்

புராணக் குவியலில் இருந்து உதாரணத்துக்காக இப்புராணம் ஸ்ரீமத் பகவத புராணம் எடுக்கப்பட்டுள்ளது. காத்தற் கடவுளாகிய ஸ்ரீ விஷ்ணுவின் பத்து அவதார மகத்துவங்களைப் பற்றிய வரலாற்று ஆவணங்களாக உள்ளன. உலகுக்கு ஏற்படவிருந்த பேரிடர்களிலிருந்து காப்பதற்காகவும் இதற்கு மூலகாரணமாக அமைந்த அரக்கர்களை அழிப்பதற்காகவும் விஷ்ணுவால் அவதாரங்கள் எடுக்கப்பட்டன.

பத்து அவதாரங்களாவன:

1. மச்சாவதாரம் - வைவஸ்வதமநுவை பிரளய மொன்றில் காத்தமை.
2. கூர்மாவாதாரம் - பிரளயத்தில் தவறிப்போய்யிருந்த அரும்பொருள்களை மீட்டல்.
3. வராஹ அவதாரம் - தேவர்களும் அசுரர்களும் பாற்கடல் கடைந்த போது மந்தர கிரியைத் தாங்கி நின்றமை
4. நரசிங்க அவதாரம் - ஹிரண்ணினை வதம் செய்தமை.
5. வாமனாவதாரம் -மகாபலியிடம் மூன்றடி மண்தானத்தால் சுவர்க்க,மததிய, பாதாளம் வரை அளந்தமை.
6. பரசுராமாவதாரம் - 'த்திரிய வம்சத்தை அழிக்கத் தோன்றியமை.
7. இராமாவாதரம் - இராவணசம்ஹரம் செய்து சீதையை மீட்டமை.
8. கிருஷ்ணாவதாரம் - ஹம்சனை கொன்று பாரதப்போர் நடாத்தி கீதை உபதேசம் செய்தமை.
9. புத்தர் அவதாரம்- பலியிடுதலை எதிர்த்து தர்மபோதனை

10. கல்கி அவதாரம் - இனி எடுக்கவிருக்கும் அவதாரம் - கலியுகத்தின் அந்தத்தில் (இறுதியில்) இடம்பெறும்.

தமிழ் புராணங்கள்.

தட்சிணாமூர்த்தியின் வடிவாக சிவபெருமான் சனகர் முதலாகிய மனிசிரேஷ்டர்களுக்குத் தர்மோபதேசம் சம்பந்தரையும், மாணிக்கவாசகரையும் பத்தி நாதரையும் ஆட்கொள்ளுவதற்காக மனித உருவத்தில் தோன்றினார். அநேகசிவபக்தர்களின் துன்பத்தை தீர்க்க மானிட உருவம் எடுத்தார். பெரிய புராணம் போன்ற தமிழ்புராணங்களில் இவைபற்றி பாடப்பட்டுள்ளது. தமிழ்மொழிப்புராணங்களாக, சிவபுராணம், பெரியபுராணம், சிவபராகிரமம், திருவிளையாடற்புராணம் என்பனவற்றைக் குறிப்பிடலாம். நவவித பக்தியென்று கூறப்படும் ஒன்பதில் சிரவணம் என்பது புராணபடனங்களையும், சுருதிகளையும் மற்றும் சமய இலக்கியங்களையும் செவிமடுத்தல் பக்தர்களின் வழிபாட்டு முறையில் இன்றியமையாததொன்றாகக் கூறப்பட்டுள்ளது. சாதனைமுறையில் சிரவணம் அதிமுக்கியம் பெறுகிறது. இதனால் பிரேமபக்தி வளர்ச்சியடைகின்றது. நாளடைவில் சிரவணம் முறைப்படி செய்வர்களின் ஆன்மா முத்திப்பேறு அடையும் எனக் கூறப்பட்டுள்ளது.

நவவித பக்தி மார்க்கம்

1. கடவுளின் நாமங்களையும் மகிமைகளையும் கேட்டல்.
2. இறைவனின் புகழ் நிறைந்த பாடல்களை பாடுதல்.
3. எந்நேரமும் இறைவனை சிந்தித்தல்.
4. இறைவனின் திருவடிகளைச் சேவித்தல்
5. நறுமலர்களினாலும் பத்திர மலர்களாலும் அர்சித்தல்.
6. சாஷ்டாங்கமாக சுவாமி சந்நிதானத்தில் வீழ்ந்து, வணங்குதல்.
7. சிவதொண்டனாக விளங்கி இறைபணி செய்தல்.
8. இறைவனுடன் தோழமைகொண்டு உரிமையுடன் பழகித்தொழுதல்
9. சரணாகதி அடையும் மனப்பாங்கை வளர்த்தல் என்பனவாம்.